## 6.10 சமத்துவபுர குடியிருப்புகளில் சில பணிகளை மேற்கொள்ள அனுமதி மற்றும் நிதி அளித்தல்

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (மாஅதி2) துறை

அரசாணை (நிலை) எண். 69 நாள் : 4.7.2006

படிக்க :

1. அரசாணை (நிலை) எண்.26. ஊரக வளர்ச்சித் (மாஅதி2) துறை, நாள் 3.3.2006
2. ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சி இயக்குநரின் கடிதம் 41904/2006/மாதி.1, நாள் : 5.6.2006

**ஆணை**

மேலே படிக்கப்பட்ட ஒன்றில் காணும் அரசாணையில் 1991–ம் ஆண்டிற்கு முன்னால் தொகுப்பு வீடு திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட ஓட்டு வீடுகளைப் பழுது பார்ப்பதற்காக ரூ.16.75 கோடி நிதி ஒதுக்கி ஆணையிடப்பட்டுள்ளது.

2. ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சி இயக்குநர் தனது கடிதத்தில் நிதியாண்டு முடிவடையும் நிலையில், மார்ச் 2006–ல் அனுமதியளித்து மேற்கூறிய ஆணை வெளியிடப்பட்டதால், ஓட்டு வீடுகள் பழுது பார்க்க அனுமதிக்கப்பட்ட தொகையைப் பயன்படுத்த இயலவில்லை என்றும் சமத்துவபுரம் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட வீடுகள் சரியான பராமரிப்பு இன்றி பழுது பார்க்கக் கூடிய நிலையில் தற்போது உள்ளன என்றும், எனவே சமத்துவபுர வீடுகளை பழுது பார்க்கும் பணிகளுக்காக ரூ.14.50 கோடி தேவை என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும், அரசாணை (நிலை) எண்.26, ஊரக வளர்ச்சித் துறை, நாள்:3.3.2006–ல் அனுமதிக்கப்பட்ட தொகையான ரூ.16.75 கோடியிலிருந்து ரூ.14.50 கோடியை சமத்துவபுர வீடுகள் பழுது பார்த்திட பயன்படுத்திக் கொள்ள அனுமதி வழங்கி ஆணை வெளியிடும்படியும் அரசினை கேட்டுள்ளார். மீதித் தொகையான ரூ.2.25 கோடி தொகையை 1991–ம் ஆண்டுக்கு முன்பு தொகுப்பு வீடு திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட ஓட்டு வீடுகளை பழுது பார்த்திட பயன்படுத்திக் கொள்ளவும் அனுமதிக்கும்படி அரசைக் கேட்டுள்ளார்.

3. மேலே பத்தி 2–ல் உள்ள ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக ஆய்வு செய்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:–

தொகுப்பு வீடு திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட ஓட்டு வீடுகளை பழுதுபார்ப்பதற்காக ஒதுக்கப்பட்ட ரூ.16.75 கோடி தொகையிலிருந்து ரூ.14.50 கோடி தொகையினை சமத்துவபுரங்களில் உள்ள சாலை, குடிநீர், தெருவிளக்கு ஆகிய வசதிகளை சீரமைக்கும் பணிகளை முதற்கட்டமாக மேற்கொள்ளவும், மீதமுள்ள நிதி இருப்பிற்கேற்ப வீடுகளின் பழுதுக்குத் தகுந்தவாறு பழுதுபார்த்தல் பணிகளை மேற்கொள்ளவும் அனுமதித்து அரசு ஆணையிடுகிறது. மாவட்ட வாரியான நிதி ஒதுக்கீடு இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இந்த ஒதுக்கீட்டு நிதியை சமத்துவபுர குடியிருப்புகளின் தேவைக்குத் தகுந்தவாறு பயன்படுத்திக் கொள்ளவும், இப்பணிகள் அனைத்தும் 31.8.2006–க்குள் முடிக்கவும் உத்திரவிடப்படுகிறது.

4. இந்த அரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.39456/Fin(RD)/06,நாள் 3.7.2006–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசு செயலாளர்

ஊ.வ. (ம) ஊராட்சி (மா.அ.தி – 2) துறை

**இணைப்பு**

**சமத்துவபுர குடியிருப்புகளுக்கு நிதி ஒதுக்கீடு**

| வ.எண் | மாவட்டத்தின் பெயர் | சமத்துவபுரங்களின் எண்ணிக்கை | தொகை ஒதுக்கீடு (ரூபாய் லட்சங்களில்) |
|---|---|---|---|
| 1. | காஞ்சீபுரம் | 5 | 50.69 |
| 2. | திருவள்ளூர் | 3 | 30.42 |
| 3. | கடலூார் | 4 | 40.56 |
| 4. | விழுப்புரம் | 6 | 60.83 |
| 5. | வேலூார் | 6 | 60.83 |
| 6. | திருவண்ணாமலை | 6 | 60.83 |
| 7. | சேலம் | 5 | 50.69 |
| 8. | நாமக்கல் | 4 | 40.55 |
| 9. | தர்மபுரி | 4 | 40.56 |
| 10. | கிருஷ்ணகிரி | 3 | 30.42 |
| 11. | ஈரோடு | 4 | 40.56 |
| 12. | கோயம்புத்தூர் | 8 | 81.11 |
| 13. | நீலகிரி | 0 | 0.00 |
| 14. | தஞ்சாவூர் | 5 | 50.69 |
| 15. | நாகப்பட்டினம் | 4 | 40.55 |
| 16. | திருவாரூர் | 5 | 50.69 |
| 17. | திருச்சிராப்பள்ளி | 6 | 60.83 |
| 18. | கரூர் | 5 | 50.69 |
| 19. | பெரம்பலூார் | 5 | 50.69 |
| 20. | புதுக்கோட்டை | 6 | 60.83 |
| 21. | மதுரை | 7 | 71.17 |
| 22. | தேனி | 4 | 40.55 |
| 23. | திண்டுக்கல் | 6 | 60.83 |
| 24. | இராமநாதபுரம் | 6 | 60.83 |
| 25. | விருதுநகர் | 6 | 60.83 |
| 26. | சிவகங்கை | 6 | 60.83 |
| 27. | திருநெல்வேலி | 6 | 60.83 |
| 28. | தூாத்துக்குடி | 6 | 60.83 |
| 29. | கன்னியாகுமரி | 2 | 20.28 |
| | **மொத்தம்** | **143** | **1450.00** |

**க. அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசு செயலாளர்